ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்
கொழும்பு
ஊடக அறிக்கை
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20220408

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் இலங்கைக்கு உதவுவதற்காக மேலதிக 7 மில்லியன் டொலர்களை வழங்கும் திட்டத்தை அறிவிக்கும் அமெரிக்கா.

கொழும்பு, 2022, ஏப்ரல் 8: கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முகமாலை ஆகிய பகுதிகளில் அமெரிக்க நிதியுதவியுடன் கண்ணிவெடி அகற்றும் திட்டங்களை மீளாய்வு செய்வதற்காக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தூதுக்குழுவொன்று 2022 ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 8ஆம் தேதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தது. 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் முயற்சிகளுக்கு அமெரிக்கா 8.3 மில்லியன் டொலர்களை தனது பங்களிப்பாக வழங்கியது. அதன் விளைவாக பல சமூகங்கள் வீடமைப்பு, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக நிலத்தைப் பாதுகாப்பாக அணுகும் வாய்ப்பைப் பெற்றன. எதிர்வரும் ஆண்டில், கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத குண்டுகள் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை சமூகங்களுக்கு உதவுவதற்காக அமெரிக்க அரசாங்கம் மேலதிகமாக 7 மில்லியன் டொலர்களை வழங்கும்.

அமெரிக்காவின் கண்ணிவெடி அகற்றும் பணி குறித்து உரையாற்றுகையில், “இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் முயற்சிகளுக்கு அமெரிக்கா வழங்கிவரும் நீண்டகால உதவியையிட்டு நான் மிகவும் பெருமையடைகிறேன். 1995 ஆம் ஆண்டிலிருந்து கண்ணிவெடி அகற்றும் பணியில் 86.3 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக நாம் முதலீடு செய்துள்ளதுடன், அந்நிதிகள் சர்வதேச பங்குதாரர்கள் மற்றும் உள்நாட்டில் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவோர் ஆகியோரின் பங்களிப்புடன், பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழும் இலங்கையர்களைப் பாதுகாத்து, பல கடின உழைப்பாளிகள் பண்ணை மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபடவும் அவர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பாக உணவளிக்கவும் உதவியுள்ளன.” என அமெரிக்க தூதுவர் ஜுலீ ஜே. சங் கூறினார்.

அமெரிக்க தூதுக்குழு இலங்கையில் தங்கியிருந்த காலத்தில், தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையம் (NMAC) மற்றும் கிளிநொச்சியில் உள்ள பிராந்திய கண்ணிவெடி நடவடிக்கை அலுவலகம் (RMAO) ஆகியவற்றின் அதிகாரிகளை சந்தித்து, கண்ணிவெடி அகற்றுவதில் அமெரிக்காவிற்கும்

இலங்கைக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக்கு இப்பணி வழங்கும் முக்கிய வகிபாகம் ஆகியன குறித்து கலந்துரையாடினர். தூதுக்குழுவினர் தாமது வடக்கிற்கான பயணத்தின் போது, சமூக நல்லிணக்கத்திற்கான டெல்வோன் சங்கம் (DASH), ஸ்கவிதா மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண செயற்திட்டம் (SHARP), Hazardous Area Life-support Organization (HALO Trust) மற்றும் கண்ணிவெடி ஆலோசனைக் குழு (MAG) உள்ளிட்ட இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குதாரர் நிறுவனங்களுக்கும் விஜயம் செய்தனர்.

உலகளாவிய மரபுரீதியிலான ஆயுதங்களை அழிக்கும் முயற்சிகளுக்கான உலகின் தனிப்பெரும் நிதி உதவியாளராக அமெரிக்கா விளங்குகிறது. 1995 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள், உபகரணங்கள், கல்வி, பயிற்சி மற்றும் திறன் விருத்தி போன்ற கண்ணிவெடி அகற்றும் உதவிக்காக 86.3 மில்லியன் டொலர்களுக்கு மேல் அமெரிக்கா முதலீடு செய்துள்ளது. அமெரிக்க உதவியானது கண்ணிவெடி மாசுபாட்டினால் பாதிக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் அம்மாசுபாட்டினை அகற்றும் முயற்சிகளுக்குப் பங்காற்றியதுடன் 2017 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தை கண்ணிவெடித் தாக்கம் இல்லாத மாவட்டமாக அறிவிப்பதற்கும் உதவியது.

இலங்கையிலும் மற்றும் உலகெங்கிலும் கண்ணிவெடி அகற்றும் முயற்சிகளுக்கு அமெரிக்கா வழங்கும் உதவிகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு, தயவு செய்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் To Walk the Earth in Safety எனும் அறிக்கையினைப் பார்வையிடவும்.